**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–1, பத்மநாபபுரம்**
**முன்னிலை : திரு.T.நரேந்திரகுமார், B.A., LLM.,PGDFL.,**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–1(கூ.மு.பொ.)**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**M.P.No.2/2025**
**in**
**C.C.No.436 of 2023**

ஆல்வின்(வயது 39/2025),
த/பெ. ஏசுதாசன்,
எண். 228/134,
சரல்விளை,
கோதநல்லூர்,
குமாரபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம். ............... மனுதாரர்

/எதிர்/

1. வட்டார கடவுசீட்டு அதிகாரி
வட்டார கடவு சீட்டு அலுவலகம்
மதுரை வட்டம்,
பாரதி உலாவீதி,
ரேஸ் கோர்ட் ரோடு, மதுரை 625 002 ................. 1–ம் எதிர்மனுதாரர்
2. உதவி காவல் ஆய்வாளர்,
கொற்றிக்கோடு காவல் நிலையம்,
கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.78/2023
கன்னியாகுமரி மாவட்டம். ................. 2–ம் எதிர்மனுதாரர்

கடந்த **08.10.2025–**ம் தேதி மனுதாரர் தனக்கு வட்டார கடவு சீட்டு அலுவலர் தனக்கு கடவு சீட்டு புதுப்பித்து தருவதற்கு உத்தரவிட வேண்டும் என்றும், அவரது தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. M.விஜயகுமார்.,** அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும் இருதரப்பும் கேட்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் .........

**// உத்தரவு //**

**1. மனுதாரர் ஆல்வின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் மீது கொற்றிக்கோடு காவல் நிலையத்தில் குற்ற எண் 78/2023, சட்ட பிரிவு 294(b), 323, 324, 506(ii) –ன் கீழ் வழக்கு பதிவு செய்து வழக்கானது நிலுவையில் உள்ளது என்றும், எனக்கு வெளி நாடுகளில் வேலை செய்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதன் நிமித்தமாக தன்னுடைய கடவுச்சீட்டை புதுப்பிப்பதற்காக 1வது

எதிர்மனுதாரரிடம் 30.04.2025–ம் தேதியன்று மனு செய்த போது மேற்படி மனுவானது நிராகரிக்கப்பட்டது என்றும், 2–ம் எதிர்மனுதாரரால் குற்ற எண்.78/2023, ச/பி 294(b), 323, 324, 506(ii) –ன் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் C.C.No.436/2023 நிலுவையில் உள்ளது என்றும், அதனை தொடர்ந்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No. 21320/2025–ன்படி பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் 05.08.2025 ஆம் தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்டுக்கொள்ளலாம் என்று அறிவுறுத்தியதன் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரை</u>**

மேற்படி மனுதாரர் வெளிநாட்டு கடவுச்சீட்டு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளதாகவும், மேற்படி மனுதாரர் மீது கொற்றிக்கோடு காவல் நிலைய குற்ற எண்.78/2023, ச/பி 294(b), 323, 324, 506(ii) –ன் கீழ் C.C.No.436/2023–ல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி வழக்கு விசாரணையில் இருக்கும்போது கடவுசீட்டு பெற அனுமதி வழங்கினால் வழக்கின் விசாரணைக்கு முறையாக ஆஜராகாமல் தலைமறைவாகிவிடுவார் என்பதால் கடவுச்சீட்டு வழங்க அனுமதியளிப்பதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

**3. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்.**

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பு சங்கதிகளும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் ஆல்வின் தரப்பில் தனது தரப்பு சங்கதிகளை சத்திய பிரமாண வாக்குமூலம் மூலமாக சமர்பித்துள்ளார். அதில் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களுடன் தான் வசிக்கிறேன் என்றும் மேலும், மனுதாரர் படித்து வருவதாகவும், வெளிநாட்டிலிருந்து பல வேலை வாய்ப்புகள் தேடி வருவதாகவும், எனவே கடவுச்சீட்டை புதுப்பித்து தருவதற்கு அனுமதி கேட்டு பிரமாண வாக்குமூலத்தில் சமர்ப்பித்துள்ளார்.

5. மேற்படி மனுதாரர் சமர்பித்த பிரமாணபத்திரத்தின் படியும், வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இந்நீதிமன்றம் மேற்படி மனுதாரரான **ஆல்வினுக்கு** அவர் கேட்ட பரிகாரத்தை வழங்குவதே உசித்தம் என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு **இம்மனுவினை அனுமதித்து** அதன் அடிப்படையில் பின்வரும் உத்தரவை பிறப்பிக்கிறது.

அ) 1–ம் எதிர்மனுதாரரான வட்டார கடவுச்சீட்டு அதிகாரி, மதுரை இவ்வுத்தரவு கிடைத்த **30** நாட்களுக்குள் மேற்படி மனுதாரர் **ஆல்வினுக்கு** கடவுச்சீட்டு புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தை அளிக்கும் போது, அல்லது இதற்கு முன்னர் அளித்த விண்ணப்ப மனுவினை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து, அதனை பரிசீலித்து மேற்படி **ஆல்வினுக்கு** கடவுச்சீட்டினை புதுப்பித்து வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

ஆ) மேற்படி கடவுச்சீட்டு **2 ஆண்டுகளுக்கு** ஒருமுறை புதுப்பிக்கும் நிபந்தனையுடன் மேற்படி கடவுச்சீட்டு கொடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இ) மேற்படி மனுதாரர் **ஆல்வின்** வழக்கு விசாரணைக்கு முறையாக தனது வழக்கறிஞர் மூலம் முன்னிலையாக வேண்டும் என்றும், வழக்கு விசாரணைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்த கூடாது என்றும், தான் சம்மந்தப்பட்ட வழக்குகளில் உள்ள தரப்பினர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்தவித தொந்தரவும் செய்யக் கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு வாய்மொழியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–திரு.T.நரேந்திரகுமார்.,B.A.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.1
பத்மநாபபுரம்(மு.கூ.பொ.)

Judicial Magistrate Court No.I,
Padmanabhapuram

Court Seal

“The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date’’.

**Copy To:-**

1. The Regional Passport Officer,
Regional Passport Office,
Maduari Region,
Bharathi Ula Veethi,
Race Court Road. Madurai

2. Sub Inspector of Police
Kotticode Police Staion,
Kotticode.